# பாடம் 14

## இறை குடும்பத்தின் உணவு

என்றும் போல் அன்றும் நாங்கள் அனைவரும் மறைக்கல்வி வகுப்பிற்குச் சென்றோம். அருட்தந்தை எங்களுக்குக் கற்பிப்பதற்கு வகுப்பறைக்கு வந்தார். செபத்துடன் பாடம் ஆரம்பமாகியது.

**அருட் தந்தை** : ஆம்மேரி... உங்களுக்கு நன்றாக ஞாபகமிருக்கிறதே இன்றைக்கு நான் உங்களுக்குத் தேவநற்கருணையைப் பற்றித்தான் சொல்லித்தரப்போகிறேன்.

**மேரி** : பாதர், நீங்கள் தேவநற்கருணையைப் பற்றிச் சொல்லித் தருவதாக அன்று கூறினீர்களல்லவா?

**மேரி** : பாதர், அந்த வெள்ளை அப்பத்தைத் தானே நாங்கள் தேவ நற்கருணை என்று சொல்லுகிறோம்.

**அருட்தந்தை** : ஆம் மேரி, அப்பமானது திருப்பலியின் போது ஒப்புக் கொடுக்கப்படுவதனால் தேவ நற்கருணையாக மாற்றமடைகிறது.



**ராதா** : பாதர், திருப்பலி என்றால் என்ன?
**அருட் தந்தை** : நல்ல கேள்வி ராதா, அதைப் பற்றிச் சொல்லித் தருகிறேன்.

இயேசுநாதர் ஒரு வியாழக்கிழமை தம்முடைய சீடர்களோடு ஒன்று சேர்ந்து, அப்பத்தைக் கொண்டு வந்து, இறைவனுக்கு நன்றி கூறி, அதைப் பிட்டுப் பகிர்ந்து உண்டார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறீர்களல்லவா? அந்த நேரத்தில் இயேசு சீடர்களுக்கு இவ்வாறு கூறினார்.

**"இது உங்களுக்காகக் கையளிக்கப்படும் என் சரீரம், இதை என் நினைவாகச் செய்யுங்கள்."**

அன்று இயேசு அப்பத்தை எடுத்துக் கூறிய அதே வசனத்தை இன்று திருப்பலியில் குருவானவர் அப்பத்தை உயர்த்தும் போது சொல்லுவதைப் பார்த்திருப்பீர்கள். அவ்வாறு ஒப்புக் கொடுக்கப்படும் போது, அப்பம் தேவநற்கருணையாக மாற்றமடைகிறது.


**அருள்** : அப்படியானால் தேவ நற்கருணை என்று நாங்கள் பெற்றுக்கொள்ளுவது இயேசுவின் திருஉடலா பாதர்?
**அருட்தந்தை** : ஆம் மகன், நீங்கள் சொன்னது சரி. திருப்பலியின் போது ஒப்புக் கொடுக்கப்படும் அப்பத்தை அனைவரும் ஒருமித்துச் சகோதரர்களாகப் பகிர்ந்து கொள்ளுகிறோம். அத்தோடு, தேவ நற்கருணையில் இயேசுவைச் சந்திப்பதற்கும் நமக்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

**ராதா** : தேவ நற்கருணையைச் சகோதரத்துவ உணவு என்று கூறுவது ஏன்?

**அருட் தந்தை** : ஆம், அன்று இயேசு தம்முடைய சீடர்களோடு ஒரே அப்பத்தை பகிர்ந்து கொண்டார்.
அன்று அவர்கள் ஒரே சகோதரர்களாக அதைப் பகிர்ந்து கொண்டு சாப்பிட்டார்கள். இயேசு நாதருடைய கடைசி இராப்போசனம் என அறிமுகம் செய்யப்படுவதும் இந்த அப்பம் பிட்டுப் பகிர்ந்து உண்ட சம்பவத்தைத் தான். அன்று தொடக்கம் திருப்பலியின் போது அந்தச் சடங்கு நடைபெற்று வருகிறது.
எனவே, இந்த அப்பத்தை உண்ணும் எல்லோரும் கிறிஸ்து நாதருடைய சகோதரர்களாகின்றோம். நாம் எந்த மொழியைப் பேசினாலும், எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், நாங்கள் எல்லோரும் ஒரே சகோதரர்கள் ஆகின்றோம். எனவேதான் தேவநற்கருணையை, சகோதரத்துவ உணவு என்று அழைக்கின்றோம்.

**மேரி** : பாதர், இன்று தேவநற்கருணையைப் பற்றி நிறைய விடயங்களை அறிந்து கொண்டோம்.

**அருட்தந்தை** : ஆம் மகனே! மகளே! நாம் அனைவரும் ஒரே இறைத் தந்தையின் பிள்ளைகள். ஒரே அப்பத்தை உண்ணும் நாம் ஒற்றுமையாகவும், அன்புள்ளவர்களாகவும் ஒருவரோடு ஒருவர் நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டு, சுக துக்கங்களைப் பகிர்ந்து கொண்டு சகோதரர்களாக வாழ வேண்டும் என்று தேவ நற்கருணையில் வீற்றிருக்கும் இயேசு விரும்புகின்றார்.
நாம் எல்லோரும் இப்போது ஒன்று சேர்ந்து பின் வரும் பாடலைப் பாடி இயேசுவுக்கு நன்றி கூறுவோம்.



**அருட்தந்தை :** செம்மறியின் விருந்துக்கு அழைக்கப்பட்டோர் பேறு பெற்றோர் அவ்விருந்தை உண்டிட சென்றிடுவோம் இன்பம் பொங்க.
இறைவன் தரும் விருந்திது - அதை உண்ணத் தடை என்ன?
உறைய வரும் இறைவனை - நாம் ஏற்கத் தடை என்ன?

**ஒப்படை :**

1. இயேசுநாதர் அப்பத்தைப் பிட்டு யாருடன் பகிர்ந்து உண்டார்?
2. இயேசுநாதர் அப்பத்தை எடுத்து நன்றி கூறிய பின்னர் சீடர்களுக்குக் கூறியது என்ன?
3. சரியான சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக. (சகோதரத்துவ உணவு, வியாழக்கிழமை, இயேசுவை)

1. கடைசி இரோப்போசனம் ........................... அன்று நடை பெற்றது.
2. தேவநற்கருணையை ................ என்று கூறுகிறோம்.
3. தேவ நற்கருணை மூலம் நாம் ........................... ச் சந்திக்கிறோம்.